# PALAVI UK

## *பாலாவி*

அங்கத்தவர்களும் சர்வதேசமெங்கும்
வாழுகின்ற  எங்கள் உறவுகளும்

இணைந்து வழங்கிய

கொரோனா இடர்களைவு கொடுப்பனவின்
கணக்கறிக்கை

2020

*அன்பான அங்கத்தவர்கள், சர்வதேசம் எங்கும் வாழும் உறவுகள் அனைவருக்கும் எங்களுடைய வணக்கங்கள்,*

*உங்களுடைய பெரும் ஆதரவுடனும் தாராள பங்களிப்புடனும், எமது மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட கொரோனா இடர்களைவு கொடுப்பனவுகள் நிறைவடைந்துள்ளன. அதற்கான கணக்குகளை இங்கு சமர்ப்பிக்கிறோம். கணக்குகளை விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர் சில குறிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறோம்..*

## *பயனாளர்கள் தெரிவு செய்யப்பட விதம்*

*1. இந்த கொடுப்பனவுகள் பாலாவி UK ன் செயற்பாட்டு பகுதிக்குட்பட்ட பயனாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்*

*2. இந்த கொடுப்பனவுகளுக்கான நிதி பாலாவி UK ன் செயற்பாட்டு பகுதிக்கு உட்பட்ட ஆனால் சர்வதேசம் எங்கும் பரந்து வாழுகின்ற எமது உறவுகளிடம் இருந்து மட்டும் திரட்டப்படும்.*

*3. எமது பிரதேசத்தில் வாழும் மக்களில் அரசாங்க தொழில் செய்வோர், அரசாங்க ஓய்வூதியம் பெறுவோர், மற்றும் தனியார் துறையில் மாதாந்த ஊதியத்தை பெறுவோர், மத்திய கிழக்கு நாடுகள் தவிர்ந்த வெளிநாடுகளில், கப்பலில் பெற்ற பிள்ளைகள் உள்ளவர்கள் ( திருமணம் செய்தவர்கள், செய்யாதவர்கள், மகன் மகள் இருபாலரும் உள்ளடங்கலாக ), இவர்களுடன் பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சில குடும்பங்கள் தவிர்ந்த அனைவரும் பயன் பெறுவார்கள்.*

*4. ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 2000.00 ரூபாவும்*

*5. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 3000.00 ரூபாவும்*

*6. மூன்றுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 5,000 ரூபாயும் கொடுப்பனவாக வழங்கப்படும்.*

*7. பயனாளர்கள் படிவம் எதுவும் நிரப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் குடும்ப அட்டையின் முழுமையான பிரதியை கட்டாயமாக வழங்க வேண்டும்*

*8. இறுதியாக மீதம் இருந்த ரூபா 116500.00 ஒவ்வொரு குடும்பத்துக்கும் மேலும் ரூபா 500.00 வழங்கப்பட்டு கணக்குகள் நிறைவு செய்யப்பட்டது.*

## *குறிப்புகள்*

*1) உதவி கொடுப்பனவை வழங்கி, கையொப்பம் பெற்று விட்டு அதனை பிரசுரித்து பயனாளர்களை சங்கடப்படுத்த கூடாது என்ற முடிவுக்கு அமைவாக அவர்களது தனிப்பட்ட விபரங்கள் இங்கே வெளியிடப்படவில்லை.*

*கணக்கு பராமரிப்பு தேவைகளுக்காக அவர்களது விபரங்கள் எம்மிடம் பாதுகாப்பாக உள்ளன.அவை இந்த உதவி வழங்குவதில் எங்களுடன் இணைந்து செயற்பட்ட அமைப்புகள், நலன்விரும்பிகளால் உறுதிப்படுத்தப்பட்டதுடன் , நிர்வாகத்தினரால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.*

*2) உங்களுக்கு உரிமையான குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டதா அல்லது எவ்வளவு வழங்கப்பட்டது என அறிய விரும்பினால் எங்களுடன் palaviuk@gmail.com முகவரியில் ,தொடர்பு கொள்ளவும்.. உரிய விபரங்களை வழங்க தயாராக உள்ளோம்..*

*3) இந்த கொடுப்பனவை பெற தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்ட பலர் அதனை பெற்றுக் கொள்ளாமல், தங்களைவிட இக்கட்டான நிலையில் உள்ள பயனாளர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டனர். அத்தகைய நல்லுள்ளம் படைத்த பலரின் நடவடிக்கையினால் இந்த கொடுப்பனவை முன்னர் திட்டமிட்டதை விட விரிவாக செய்யகூடிய மாதிரியாக இருந்தது. அந்த வகையில் அவர்களை நாம் பாராட்டுவதுடன் இங்கே அவர்களது விபரங்களை வெளியிட்டு கௌரவப்படுத்த விரும்புகிறோம்.*

- *திரு.கந்தசாமி கோபாலசுந்தரம் - குருநாதர் கோவிலடி*
- *செல்லத்துரை ரூபசௌந்தரி - சின்னக்கடை*
- *திருமதி.கலைமோகன் ஆதிரை - கந்தசாமி கோவிலடி*
- *திருமதி.பிரகதீஸ்வரன் திருமகள் - கந்தசாமி கோவிலடி*
- *திரு.கிருஷ்ணபிள்ளை கதிர்காமநாதன் - கந்தசாமி கோவிலடி*
- *திருமதி .இராசசிங்கம் பவளமலர்- குருநாதர் கோவிலடி*
- *திருமதி.கந்தசாமி பத்மனாதேவி -பிள்ளையார் கோவிலடி*
- *திருமதி.ஞாணசேகரம் சகுந்தலாதேவி -பிள்ளையார் கோவிலடி*
- *த.தவமணி - கொற்றாவத்தை*
- *திரு.கணேசமூர்த்தி சாந்தகுமார் - கொற்றாவத்தை*
- *திருமதி.இராஜகோபால் வசந்தமணி -கொற்றாவத்தை*
- *திருமதி.ஸ்ரீகாந்தன் ஜீவா - சாவத்தை*
- *திருமதி. சிவசெந்தில்வேல் பவனேஸ்வரி - பெரியகிணற்றடி*
- *திருமதி. ஞானேஸ்வரன் கமலாதேவி - சட்டங்கன் தோட்டம்*

4) *அவர்களைக் கௌரவப்படுத்துவதில் நீங்களும் எங்களுடன் இணைந்து கொள்ளுவீர்கள்என நம்புகிறோம் எமது சமூகத்தில் இத்தகைய மனப்பான்மை மேலும் மேலும் வளர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.*

5) *இறுதியான கணக்குகள் கொடுப்பனவு வழங்கப்பட்ட இலங்கை ரூபாயில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.இருப்பினும் பிற நாட்டில் பெறப்பட்ட காசுகள் பெறப்பட்ட நாட்டு நாணயங்களிலும் அனுப்பிபோது கிடைத்த இலங்கை ரூபாவிலும் தந்துள்ளோம். நாணய மாற்று விகிதம் காரணமாக இங்கு சிறு பெறுமதி ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம் என்பதை அறியத்தருகிறோம்..*

## கிடைத்த நன்கொடைகள்

| பெயர் | விலாசம் | வரவு | ரூபா- வரவு |
|---|---|---|---|
| திரு. கணேசபிள்ளை யோகேஸ்வரன் | மாவடைப்பு-*UK* | *£121.98* | *28172.78* |
| திரு.கிருஷ்ணபிள்ளை நந்தகுமார் | குருநாதர்கோவிலடி-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.சபாரத்தினம் பழனிநாதன் | குருநாதர்கோவிலடி-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.சிவபாதம் சிவனேஸ்வரன் | தடுவன்-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.கந்தையா காண்டீபன் | ஆண்டாவளவு-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு.ஆறுமுகம் சர்வேஸ்வரன் | ஒதியடி-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு.கிருஷ்ணபிள்ளை ஜெயநாதன் | வாடியப்புலம்-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.சுப்ரமணியம் சுதர்சன் | கந்தசாமி கோவிலடி-*UK* | *£500.00* | *117,540.00* |
| திருமதி. தவராணி வசந்தகுமார் | பழவளவு-*UK* | *£200.00* | *47,016.00* |
| திரு. கதிர்காமதம்பி தயாநிதி | பழமுதிர்சோலை-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.கீதநாதபிள்ளை சுந்தரதாசன் | ஆண்டாவளவு-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு.தம்பிமுத்து சாந்தகுமார் | நம்பித்தாவத்தை-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு. தவராஜா விக்னராஜ் | கிளானை-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு. தங்கவேலாயுதம் கிருஷ்ணநாதன் | பாலாவித்தெரு-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு.ஜெயச்சந்திரன் முகுந்தன் | தடுவன்-*Singapore* | *$250.00* | *33,333.34* |
| திரு. கனகசபாபதி சுஜீவன் | பாலாவித்தெரு-*Canada* | *$150.00* | *20,250.00* |
| திரு. விநாசித்தம்பி ரூபன் | கொற்றாவத்தை-*Canada* | *$150.00* | *20,250.00* |
| திரு. நந்தகுமார் தங்கவேலாயுதம் | சின்னக்கடை-*Canada* | *$150.00* | *20,250.00* |
| திரு.உமாமகேஸ்வரன் வைகுந்தன் | செம்பாடு- *Canada* | *$50.00* | *6,750.00* |
| திருமதி. ஜெயராணி ஜெயக்குமார் | ஒதியடி-*Canada* | *$100.00* | *13,500.00* |
| திரு. ஜெயசுதன் செல்வரட்னசிங்கம் | பாலாவி-*Singapore* | *$50.00* | *6,666.66* |
| திரு. பொன்னையா நந்தகுமார் | பாலாவித்தெரு-*Swiss* | *Fr107.58* | *20,730.0* |

| | | | |
|---|---|---|---|
| திருமதி. வதனி ரமேஷ் | ஆண்டாவளவு-*Holland* | *£50.00* | *11,754.00* |
| திருமதி.மதிவதனி பசீதரன் | தம்பலடி-*Swiss* | *£50.00* | *11,754.00* |
| திரு. செல்லத்துரை குலேந்திரராஜா | தம்பலடி-*Swiss* | *Fr50.00* | *9,635.00* |
| திரு.சின்னையா மயூரன் | தம்பலடி-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு. சிவகுமார் கஜந்தன் | சின்னாவளை-*Swiss* | *£50.00* | *11,754.00* |
| திருமதி.செல்வராணி சிதம்பரம் | தம்பலடி-*Swiss* | *Fr50.00* | *9,635.00* |
| திரு.ஜெயச்சந்திரன் சேந்தன் | தடுவன்-*Canada* | | *75,000.00* |
| திரு. மாணிக்கம் காசிலிங்கம் | சின்னக்கடை-*Swiss* | *£106.38* | *25,000.00* |
| திருமதி. சுகந்தி வசீகரன் | சின்னக்கடை-*USA* | *$63.83* | *15,000.00* |
| திருமதி. சாந்தி புலேந்திரன் | சின்னக்கடை-*USA* | *$63.83* | *15,000.00* |
| *Dr.*இராஜன் நமசிவாயம் | மாதாங்கோவிலடி-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு.வேலாயுதம்பிள்ளை தயாபரன் | நம்பித்தாவத்தை-*UK* | *£200.00* | *47,016.00* |
| திரு.பரமசாமி நந்தகுமார் | தடுவன்-*UK* | *£50.00* | *11,754.00* |
| செல்வன். நிவேஜன் நந்தகுமார் | குருநாதர்கோவிலடி-*UK* | *£20.00* | *4,701.60* |
| செல்வன். தர்சன் நந்தகுமார் | குருநாதர்கோவிலடி-*UK* | *£20.00* | *4,701.60* |
| திரு.நடராஜா சண்முகராசா | அ.மிஷன் வீதி-*UK* | *£100.00* | *23,508.00* |
| திரு. பாலசுப்ரமணியம் நாராயணமூர்த்தி | வலங்கையன்-*UK* | *£50.00* | *11,754.00* |
| திரு. கந்தசாமி ரவீந்திரன் | நறுவிலியடி-*Swiss* | *Fr100.00* | *19,270.00* |
| திரு.நடராசா சண்முகசுந்தரம் | இளமாலை-*Holland* | *€ 50.00* | *9,737.01* |
| திரு.ஏரம்பமூர்த்தி சிவகிருபன் | ஏழுபுளியடி-*Belgium* | *€ 50.00* | *9737.01* |
| <u>மொத்த வரவுகள்</u> | | | ***<u>884500.00</u>*** |

**செலவு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| அம்பிகை சனசமூக நிலையம் | 112 | 374,000.00 | |
| ஆண்டாவளவு சனசமூக நிலையம் | 27 | 94,000.00 | |
| விநாயகர் சனசமூக நிலையம் | 73 | 233,000.00 | |
| கொற்றையூர் சனசமூக நிலையம் | 21* | 59,000.00 | |
| அம்பிகை சனசமூக நிலையம்- Rs500 | 113 | 56,500.00 | |
| ஆண்டாவளவு சனசமூக நிலையம்-Rs500 | 27 | 13,500.00 | |
| விநாயகர் சனசமூக நிலையம்-Rs500 | 73 | 36,500.00 | |
| கொற்றையூர் சனசமூக நிலையம்-Rs500 | 20* | 10,000.00 | |
| வரவு செலவு அறிக்கை பதிப்பு | | 8,000.00 | |
| மொத்த கொடுப்பனவு | **233** | | 8,84,500.00 |
| மீதி இருப்பு ரூபா | | | 0 |

**கொற்றையூர் பயனாளர் ஒருவர் நிர்வாக இலகுவாக்கலுக்காக அம்பிகை சனசமூக நிலையத்தின் ஊடாக 2ம் கட்ட கொடுப்பனவை பெற்றுக்கொண்டார்.

பாலாவிUK எப்போதும் கருத்துக்கள், திருத்தங்களை கவனத்திற்கு ஏற்பதில் பின்நிற்பதில்லை.அவைதான் எங்களை மேலும் சிறப்புற செயற்பட வைக்கின்றன. அந்த வகையில் உங்களுடைய ஆக்கபூர்வமான கருத்துக்களும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன. அவற்றின் காத்திரத்தன்மை , நடைமுறை சாத்தியங்கள் போன்றவற்றையும் அனுசரித்து எதிர்வரும் செயல்திட்டங்களில் சேர்த்துக்கொள்கிறோம்.

இறுதியாக இந்த முன்னெடுப்பில் பங்களித்த அனைவருக்கும், எம்மண்ணில் இந்த கொடுப்பனவை சிறப்புற நிறைவு செய்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களது பங்களிப்பின்றி இந்த செயற்திட்டத்தை இவ்வளவு சிறப்பாக செய்திருக்கமுடியாது. உங்களது காத்திரமான பங்களிப்பை எப்போதும் எதிர்பார்க்கிறோம்.

## "மீண்டும் வருவோம் ஒன்றாய் நிற்போம்"

# கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையம்

நூல் நிலையம் — விளையாட்டுக் கழகம்

# KOTTAWATHAI CENTRAL COMMUNITY CENTRE

LIBRARY — SPORTS CLUB

கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.
Kottawathai, Valvettithurai.

Regd. No. / பதிவு இல. J/UC 42/CC/205

Date 30. 08 2020

---

தலைவர் / நிர்வாகிகள்
மானவி இல்லம்:

அன்புடையீர்!

நிதி கொடுப்பனவு பெற்றமை.

எமது பகுதி மக்களின் அசாதாரண நிலையில் இருந்த (கொவிட்19) வேளை தங்களால் வழங்கப்பட்ட நிதி உதவிக்கு தங்களுக்கு எமது சனசமூக நிலைய சார்பாகவும், நிதி உதவி பெற்ற மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

P.S Rajah
தலைவர்
கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையம் வல்வெட்டித்துறை

பொருளாளர்

[signature]
செயலாளர்

# ஆண்டாவளவு சனசமூக நிலையம்

## ஆண்டாவளவு, கொற்றாவத்தை

ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1993.01.15


ப.பாரதிநாதன்
தலைவர்

சூ.செந்தூரன்
உப தலைவர்

தெ.முகுந்தன்
செயலாளர்

ச.சிவபாலன்
உப செயலாளர்

கீ.சுந்தரமோகன்
பொருளாளர்

நிர்வாக உறுப்பினர்கள்
த.ஜெகதீசன்
த.ஜெகதீபன்
க.சிந்துஜன்
யோ.கிருத்திகன்
கீ.சுதர்சன்
சூ.திவாகர்
சி.சிவகரன்


27 / 08 / 2020

**நன்றி கூறல் தொடர்பானது**

கொரோனா இடர் காலத்தில் எமது நிலையத்திற்கு உட்பட்ட மக்களிற்கு பண ரீதியான கொடுப்பனவுகளை இரண்டு கட்டங்களாக வழங்கிய பாலாவி UK அமைப்பினருக்கும், அதற்கான நிதியுதவியினை வழங்கிய புலம்பெயர் உறவுகளுக்கும் ஆண்டாவளவு சனசமூக நிலையத்தின் சார்பாக நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்

செயலாளர்

**பொலிகை விநாயகர் சனசமூக நிலையம்**

**Polikai Vinayagar Community Centre**

பதிவு இல:- J/UV/3/CC/453

நிலைய ஸ்தாபிதம் :- 03.01.1977.

150

பொலிகண்டி மேற்கு.
Polikandy West.

26/08/2020

சி. பாலகிருஷ்ணன் — தலைவர் /President

இ. கண்ணதாசன் — பொருளாளர் /Treasurer

செ. சுப்பிரமணியம் — செயலாளர் /Secretary

கொரோனா நிதி வழங்கிய புலம் பெயர்ந்து வாழும் எம் உறவுகளுக்கு நன்றி

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய புலம்பெயர்ந்து வாழும் எம் இனிய உறவுகளே!

நீங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும்,உங்கள் நினைவுகளும் , கனவுகளும் எம்மையும் எமது கிராமத்தையும் நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதை நீங்கள் லண்டன் வாழ் பாலாவி ஒன்றியத்தினூடாக உணர்த்தியுள்ளீர்கள். அந்தவகையில் "கொரோனா" என்ற கொடிய நோய் உலகையே நிலைகுலைய வைத்த தருணம். அதிகமாக பாதிக்கப்பட்ட நீங்கள் வசிக்கும் நாடுகளில் மரணங்கள் அதிகரிக்க.வேலைகள் குறைக்கப்பட்டு ,முழுநாடுமே முடக்கப்பட்டு சூனியமாக காட்சயளித்த நேரம். உங்கள் சுமைகளையும் பாராது, உயிருக்கே ஆபத்தான சூழ்நிலையிலும் எம்மையும் திரும்பிப் பார்துள்ளீர்கள். நன்றி. நாம் பிறந்த மண்ணிலுள்ள எம் உறவுகள் தொழில் இன்றி உணவிற்காக தவிக்கப் போகிறார்களே என்று எண்ணி,பாதிக்கப்பட்டவர்களது விபரங்களை திரட்டி,பாரபட்சமின்றி எந்தகுறையும் வராமல் உதவ வேண்டும் என்பதில் நீங்கள் தீவிரமாக செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. நீங்கள் வழங்கிய இவ்வுதவி எம் மக்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. இதற்கான நிதி அன்பளிப்புச் செய்த , புலம் பெயர்ந்து வாழும் அனைத்து உறவுகளுக்கும், லண்டன் வாழ் பாலாவி ஒன்றியத்தினருக்கும் எமது மக்கள் நன்றிகள் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் சார்பாக நாங்களும் நன்றிகளை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி நன்றி நன்றி

POLIKAI VINAYAGAR COMMUNITY CENTRE
Pillaiyar Kovilady
Polikandy West
Re.No:J/UV/3/CC/453
03.01.1977

S. Bala...

தலைவர் /President

பொருளாளர் /Treasurer

செயலாளர் /Secretary

Scanned by TapScanner



# அம்பிகை சன சமூக நிலையம்

பொலிகண்டி

**Ambikai Community Centre Polikandy**

Regd No : J/VC42/CC/663/ Date : 18.10.1984

பத்திரகாளி அம்மன் கோவிலடி
பொலிகண்டி வல்வெட்டித்துறை

Paththirakali Amman Kovilady,
Polikandy, Velvettithurai.

திகதி 26.08.2020

## கொரோனா நிதி வழங்கியோருக்கு நன்றி தெரிவித்தல்

எமது மண்ணில் பிறந்து உலகமெங்கும் வாழும் எமது உடன் பிறப்புகளுக்கும் அவர்களுட.ன் சேர்ந்து பாலாவி UK நிர்வாகத்தினருக்கும் அங்கத்தவர்களுக்கும் எமது முதற்கண் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

பாலாவி UK உறவுகள் சர்வதேசம் எங்கும் வாழும் எமது உறவுகளுடன் இணைந்து கொரோனா இடர்கால கொடுப்பனவுகளை வழங்க எமது ஒத்துழைப்பையும் கேட்டிருந்தனர். அந்த வகையில் அவர்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

உலகமெங்கும் உள்ள உறவுகள் முதன்முறையாக ஒன்று சேர்ந்து எமது நிலையத்திற்கு உட்பட்ட மக்களின் துயர் போக்க முன்வந்து உதவிசெய்து இருந்தனர் ஓரளவேனும் ஆறுதலடைந்த மக்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர் அவர்களின் சார்பாக எமது நிலையமும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றது.

தங்களின் சேவைகளை தொடர எல்லாம் வல்ல அம்பாளை வேண்டி பிராத்திக்கின்றோம்.

நன்றி

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|